# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

**CC NO. 266/2024**

Date : 23.03.2026 PW5 / LW5

| பெயர் | குப்புசாமி | ஆதார் எண் | |
|---|---|---|---|
| தந்தை பெயர் | பரமசிவம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | ஆரியநத்தம் | வயது | 47 |
| எதிரிகள் 2 to 9 ஆஜர் இல்லை. குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் ஆரியநத்தம் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை எப்போது செய்தேன் என்றால் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் ஆரியநத்தம் கிராமத்தில் உள்ள VAO அலுவலகத்திற்கு அருகில் வைத்து கையொப்பம் செய்தேன். போலிசார் சண்டை வழக்கு தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு உதவி ஆய்வாளர் திரு.பாலமுரளி என்பவர் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார். அவர் விசாரணை செய்து வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சியாக என்னிடம் பார்வை மகசரில் கையொப்பம் பெற்றார். என்னுடன் எனது தம்பி மணிகண்டன் என்பவரும் கையொப்பம் செய்தார். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

1ம் எதிரி சக்கரை குடும்பத்தினரும் சாட்சி மணியின் குடும்பத்தினரும் உறவினர்கள் என்று சொன்னால் அது சரிதான். இரு குடும்பத்தினரும் எனக்கு உறவினர்கள் என்று சொன்னால் சரிதான். போலீசார் சம்பவ இடம் வந்து எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்றால் மாலை சுமார் 04.00 - 04:30 மணி போல இருக்கும். நான் எழுதாத

வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. வரைபடம் தயார் செய்து எழுதிய தாளில் தான் நான் கையொப்பம் செய்தேன். சம்பவ இடத்தில் வைத்து வழக்கு சாட்சிகள் யாரேனும் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. எனக்கு அடிக்கடி காவல் நிலையம் செல்லும் பழக்கம் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். நான் காவல் நிலையம் அடிக்கடி செல்லும் வழக்கம் உள்ளதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகசரில் கையொப்பம் செய்தேன் என்று சொன்னாலோ போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலோ அவர்கள் வரைபடம் ஏதும் என் முன்னிலையில் தயார் செய்யவில்லை என்று சொன்னாலும் அது சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>- இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Sd- Thiru.R.P.Ajieth Singh Raaja
Judicial Magistrate-II,
Ulundurpet.

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II , ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Code of Criminal Procedure)

**CC NO. 266/2024**

**Date** : 23.03.2026 **PW4 / LW7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர். சுரேஷ் | ஆதார் எண் | |
| தந்தை பெயர் | தமிழ்மணி | தொழில் | குழந்தைகள் மருத்துவர் - சென்னை எழும்பூர் |
| கிராமம் | சென்னை | வயது | |
| எதிரிகள் 2 to 9 ஆஜர் இல்லை. குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

I. நான் தற்சமயம் சென்னை எழும்பூரில் உள்ள அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 26.04.2021 அன்று உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மணி, த/பெ. ஆதிகேசவன் என்பவரை ஆறுமுகம் என்பவர் மதியம் 02.00 மணியளவில் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். மணி தன்னை 6 நபர்கள் அன்றைய தினம் மதியம் 01.30 மணியளவில் ஆரியநத்தம் ரோட்டின் அருகில் வைத்து கத்தி, கல் மற்றும் தடியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு

1. அவரது இடது தலைபகுதியில் கிழிந்த காயம் காணப்பட்டது.
2. அவரது கழுத்திலும், இடது கையிலும் வலி இருப்பதாக கூறினார்.
3. அவரது உடலில் வலி இருந்ததாக கூறினார்.

அவரை வெளி நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயம் என காயச்சான்றிதழ் வழங்கினேன். அந்த **காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

II. கடந்த 26.04.2021 அன்று மதியம் 01.30 மணியளவில் நான் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சுரேஷ், த/பெ.மணி என்பவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார். சுரேஷ் தன்னை 3 நபர்கள் அன்றைய தினம் மதியம் 01.00 மணியளவில் ஆரியநத்தம் ரோட்டில் VAO அலுவலகத்திற்கு அருகில் வைத்து இரும்பு கம்பி மற்றும் பிளேட் ஆகியவற்றால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு,

1. அவரது மார்பகத்திலும் தாடையிலும் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.
2. அவரது முதுகிலும் வலது தொடையிலும் வீக்கம் இருந்தது.

அவரை வெளி நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயம் என காயச்சான்றிதழ் வழங்கினேன். அந்த **காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

1. சுரேஷ் என்பவர் மதியம் 1:30 மணி அளவில் மருத்துவமனைக்கு தாமாக தான் வந்து சிகிச்சைக்காக சேர்ந்தார் என்று சொன்னால் சரிதான். சுரேஷ் என்பவருக்கு மார்பகம் மற்றும் தாடையில் ஏற்பட்ட சிராய்ப்பு காயங்களானது அவர் கீழே விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சுரேஷ்க்கு முதுகு மற்றும் வலது தொடையில் ஏற்பட்ட வீக்கமானது கீழே விழும்போது ஏதேனும் பொருட்களில் இடிபட்டு ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சுரேஷ்க்கு வெளிப்புற இரத்த காயங்கள் ஏதும் இல்லை என்று சொன்னால் சரிதான். சுரேஷ் தன்னை தாக்கிய 3 நபர்களின் பெயர்களை ஏதேனும் என்னிடம் குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் இல்லை.

2. மணி என்பவர் மதியம் 2 மணி அளவில் தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார் என்று சொன்னால் அது சரிதான். மணிக்கு ஏற்பட்ட முதல் காயமானது அவர் கூர்மையான பகுதி ஏதேனும் மோதினால் கூட ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. அவருக்கு உள்ள கழுத்து வலி, இடது கை வலி மற்றும் உடல் வலியானது அவரது உடல் பாவனையாக கூட இருக்கலாம் என்று சொன்னால் அது சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்யும்போது ஆயுதம் ஏதேனும் காட்டி விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. மணி மற்றும் சுரேஷ் இருவரும் வெளி நோயாளியாக தான் சிகிச்சை பெற்றார்கள் என்று சொன்னால் அது சரிதான்.

**மறுவிசாரணை- இல்லை**

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Judicial Magistrate-II,
Ulundurpet.